**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண் : 02** **நாள்: 02.01.2019**

**தமிழ்நாடு அரசின் சார்பாக அம்மா இருசக்கர வாகன உதவி திட்டத்தின்கீழ் மானியம் பெற பணிபுரியும் மாற்றுத்திறனாளி பெண் பயனாளிகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன என ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

தமிழ்நாடு அரசின் சார்பாக அம்மா இருசக்கர வாகன உதவி திட்டத்தின்கீழ் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பணிபுரியும் மாற்றுத்திறனாளி பெண் பயனாளிகளிடமிருந்து இருசக்கர வாகனம் மானியம் பெற விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

தமிழ்நாடு அரசின் சார்பில் பணிபுரியும் பெண்களுக்கு அம்மா இருசக்கர வாகன உதவி திட்டத்தின் கீழ் 50 சதவீதம் மானியம் வழங்க (அதிகபட்சம் ரூ.25,000/–) ஆணையிடப்பட்டது. இதில் 4 சதவீதம் பணிபுரியும் மாற்றுத்திறனாளி பெண்களுக்கு மானியம் வழங்கப்பட வேண்டும். அதனடிப்படையில் அம்மா இருசக்கர வாகன உதவி திட்டத்தின்கீழ் பெருநகர சென்னை மாநகராட்சி 15 மண்டலங்களிலில் பணிபுரியும் பெண்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு கல்வித்துறை மூலமாக 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது.

கடந்த 2017–18ம் நிதியாண்டில் சென்னை மாவட்டத்திற்கு 9,519 பயனாளிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதில் 9,138 பணிபுரியும் பெண்களுக்கு அம்மா இருசக்கர வாகனங்கள் வாங்க மானியம் வழங்கப்பட்டுள்ளது. இதில் பணிபுரியும் மாற்றுத்திறனாளி பெண்களுக்கு 4 சதவீதம் அதாவது 381 பயனாளிகளுக்கு வாகனங்கள் வாங்க மானியம் வழங்கப்பட வேண்டும்.

எனவே, 18 வயது முதல் 40 வயது வரை உள்ள பணிபுரியும் மாற்றுத்திறனாளி பெண்கள் தகுந்த ஆவணங்களுடன் சம்பந்தப்பட்ட மண்டலங்களில் அம்மா இருசக்கர வாகன உதவித் திட்டத்தின்கீழ் மானியம் பெற விண்ணப்பிக்கலாம் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

**வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெருநகர சென்னை மாநகராட்சி**